**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
**CC.No.215/2024**

Deposition of LW2 examined as PW 2 **Dt. 18.07.2025**

| | |
|---|---|
| Name | பாபுராஜ் |
| Father's/Husband's Name | செல்வகுமார் |
| Village | மறையூர் |
| Taluk | |
| Age | 25/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 18.07.25
(A1 to A4 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து பி.காம் முடித்து விட்டு வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்.அ.சா.1 ஐ எனக்கு தெரியும். எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 17.01.2024 ம் தேதி அன்று அ.சா. 1 உடன் நான் அவருடைய மாமியார் வீடான அசிக்காட்டிற்கு சென்று விட்டு அ.சா. 1 ன் இருசக்கர வாகனத்தில் ப.சா.4 ராஜா என்பவர் ஓட்ட, நாங்கள் இருவரும் பின்னால் அமர்ந்து கொண்டு இரவு 09.00 மணி அளவில் அசிக்காடு பெரிய தெருவிற்கும் மெயின்ரோட்டிற்கும் இடையில் வந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். அந்த இடத்தில் எங்களது பைக்கானது நின்று விட்டது. எங்களிடம் ஆஜர் எதிரிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஆஜர் எதிரிகளில் ரத்தீஸ், அ.சா.1 ஐ பார்த்து குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். என்னை அந்த ஊரைச்சேர்ந்த 2 பையன்கள் இங்கு ஏன் வந்தாய் என்று கேட்டு என்னை மெயின் ரோட்டிற்கு இழுத்துக்கொண்டு சென்றார்கள். அ,சா.1 ஐ கூட்டமாக நின்று கொண்டு அடித்தார்கள்.என்னை இழுத்துச்சென்ற பையன்களிடம் என்னை விடுங்கள் என்னுடன் வந்த அ.சா.1 ஐ அடிக்கிறார்கள் என்று கூறினேன்.அவர்கள் விட்ட பிறகு நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்போது அ,சா.1 தனது வலது பக்க தோள்பட்டையை பிடித்து கொண்டு வந்தார். முகத்தில் இருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. அ.சா.1 என்னிடம் என்னை அடித்து விட்டார்கள் என்று கூறினார். வலிக்குது வலிக்குது என்று கூறினார். நான் அ.சா.1 ன் அண்ணன் வினோத்திற்கு மேற்படி தகவலை கூறினேன், அவர் வந்து அ.சா.1 ஐ இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார். நானும் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் கடந்த 17.01.2024 ம் தேதி அன்று அ.சா. 1 உடன் நான் அவருடைய மாமியார் வீடான அசிக்காட்டிற்கு சென்று விட்டு அ.சா. 1 ன் இருசக்கர வாகனத்தில் ப.சா.4 ராஜா என்பவர் ஓட்ட, நாங்கள் இருவரும் பின்னால் அமர்ந்து கொண்டு இரவு 09.00 மணி அளவில் அசிக்காடு பெரிய தெருவிற்கும் மெயின்ரோட்டிற்கும் இடையில் வந்தோம். அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். அந்த இடத்தில் எங்களது பைக்கானது நின்று விட்டது. எங்களிடம் ஆஜர் எதிரிகள் பேசிக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஆஜர் எதிரிகளில் ரத்தீஸ், அ.சா.1 ஐ பார்த்து குச்சிக்காரி தேவுடியா மகனே என்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். என்னை அந்த ஊரைச்சேர்ந்த 2 பையன்கள் இங்கு ஏன் வந்தாய் என்று கேட்டு

என்னை மெயின் ரோட்டிற்கு இழுத்துக்கொண்டு சென்றார்கள். அ,சா.1 ஐ கூட்டமாக நின்று கொண்டு அடித்தார்கள்.என்னை இழுத்துச்சென்ற பையன்களிடம் என்னை விடுங்கள் என்னுடன் வந்த அ.சா.1 ஐ அடிக்கிறார்கள் என்று கூறினேன்.அவர்கள் விட்ட பிறகு நான் சம்பவ இடத்திற்கு வந்தேன். அப்போது அ,சா.1 தனது வலது பக்க தோள்பட்டையை பிடித்து கொண்டு வந்தார். முகத்தில் இருந்து ரத்தம் வந்து கொண்டிருந்தது. அ.சா.1 என்னிடம் என்னை அடித்து விட்டார்கள் என்று கூறினார். வலிக்குது வலிக்குது என்று கூறினார். நான் அ.சா.1 ன் அண்ணன் வினோத்திற்கு மேற்படி தகவலை கூறினேன், அவர் வந்து அ.சா.1 ஐ இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சேர்த்தார். நானும் மருத்துவமனைக்கு சென்றிருந்தேன் என்ற விபரங்களை போலிசாரிடம் சொன்னேனா என்றால் இ ல்லை. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை என்றாலும் அ.சா.1 எனது தெருக்காரர் என்பதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி யின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.